# கும்பகோணம் அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழர் வாழ்வுரிமை மீட்பு விழா

கும்பகோணத்தை அடுத்து கோவிலாச்சேரியில் அமைந்துள்ள அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழ்த்துறை, ஆங்கிலத்துறை, மற்றும் காட்சித் தொடர்பியல்துறை சார்பில் **"தமிழர் வாழ்வுரிமை மீட்பு விழா – 2018"** நடைபெற்றது. இவ்விழாவில் தமிழரின் மறைந்து போகும் கலைகளை மீட்டெடுக்கும் விதமாக பள்ளி மாணவர்களுக்கு இடையேயான கலைத்திறன் போட்டிகளான கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி நடைபெற்றன. அன்னை கல்விக்குழும **செயலர் திரு.மு.இ.ஹீமாயூன் கபீர்** அவர்கள் தலைமையேற்று நடத்தி நிகழ்ச்சிகளைத் தொடங்கி வைத்தார். இவ்விழாவிற்கு அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி **முதல்வர் முனைவர் சீ.பொ.மாணிக்கவாசுகி** முன்னிலையேற்று நடத்தினார். சிறப்பு விருந்தினராக **ஜெயா தொலைக்காட்சி தலைமை பதிப்பாளர் திரு.அசோக்** அவர்கள் கலந்து கொண்டு தமிழரின் தொன்மையும் மொழிக்குச் செய்யும் சேவை பற்றியும் எடுத்துரைத்தார். மேலும், **தஞ்சாவூர் சரஸ்வதி மஹால் நூலகம் தொல்லியல்துறை தமிழ்ப் பண்டிதர் திரு.மணிமாறன்** அவர்கள் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கி பாராட்டி பேசும் போது தமிழரின் கலை, பண்பாடு, நாகரிகம், மொழி, இனம் இன்று நலிவடைந்து கொண்டே போகிறது. காவிரி பிரச்சனை, வறட்சி, விவசாயம் பேரழிவு என மனித வளங்களை, இயற்கை வளங்களை மீட்கக்கூடியவர்களாக விளங்க வேண்டும் என்று பேசினார். இவ்விழாவில் தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர், அரியலூர் ஆகிய 5 மாவட்டங்களில் இருந்து சுமார் 1000 - த்திற்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்கள் போட்டிகளில் கலந்து கொண்டனர். கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியின் முதலாவதாக **தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ஜெ.லொயோலா பீரிஸ்** வரவேற்றுப் பேசினார். இறுதியாக **ஆங்கிலத்துறை தலைவர் பேரா. தி.ஆ.சுரேஷ்** நன்றி கூறினார். நிகழ்ச்சிகளை **பேரா. சு. சோமசுந்தரம்** தொகுத்து வழங்கினார். நிகழ்ச்சி ஏற்பாடுகளைத் தமிழ்த்துறை, ஆங்கிலத்துறை மற்றும் காட்சித் தொடர்பியல்துறை மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் செய்திருந்தனர்.



31.08.2018
அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கோவிலாச்சேரி, கும்பகோணம்.
தமிழ்த்துறை, ஆங்கிலத்துறை, மற்றும் காட்சித்தொடர்பியல் துறை
நடத்தும்
மாவட்ட அளவில் பள்ளிகளுக்கிடையேயான பல்திறன் போட்டிகள்
CHIEF GUEST
College